**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**தேதி 11.07.2025** **நேரம் மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

பல்வேறு அரசுத் துறைகளில் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட, 51 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை, நியமன ஆணைகளை வழங்குகிறார்.

இளைஞர்கள் அதிகம் உள்ள நாடான இந்தியாவில், இளைஞர்கள்தான், வளர்ச்சியில் அதிக பங்களிக்க முடியும் என்று, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் கூறியுள்ளார்.

**பேட்டரியில் இயங்கும் லாரிகளுக்கு ஊக்கத் தொகை** வழங்கும் திட்டத்தை, மத்திய கனரக தொழில் துறை அமைச்சர் திரு. **ஹெச்.டி குமாரசாமி**, புதுடெல்லியில் இன்று தொடக்கி வைத்தார்.

புதுச்சேரியில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் செயல்பாடுகள் குறித்து, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் இன்று சீராய்வுக் கூட்டம் நடத்தினார்.

---

மோடி-வேலை வாய்ப்பு (13)

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை, காணொலிக் காட்சி மூலமாக நடைபெறும் நிகழ்ச்சியில், பல்வேறு அரசுத் துறைகள், மற்றும், நிறுவனங்களில் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட, 51 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு நியமன ஆணைகளை வழங்கி உரையாற்ற இருக்கிறார். இந்த 16ஆவது, ரோஜ்கார் மேளா என்னும் வேலை வாய்ப்புத் திருவிழா, ஒரே சமயத்தில் நாடெங்கிலும் 47 இடங்களில் நடைபெறும். புதிதாக பணிக்கு தேர்தெடுக்கப் பட்டுள்ள இளைஞர்கள், மத்திய சுகாதாரம், ரயில்வே, உள்துறை, மற்றும், இதர துறைகளில் பணியில் சேர உள்ளனர். நாட்டில் வேலை வாய்ப்புகளை

பெருக்குவதில், பிரதமர் திரு. நரேந்திர மோடி காட்டி வரும் உறுதிபாட்டை நிறைவேற்றுவதில், முக்கிய நடவடிக்கையாக ரோஜ்கார் மேளாக்கள் திகழ்வதும், இதுவரையிலான ரோஜ்கார் மேளாக்கள் மூலம், ஏற்கனவே 10 லட்சத்திற்கும் மேற்பட்ட நியமன ஆணைகள் வழங்கப் பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

---------------------------

*அஜித் தோவல்-சென்னை* (19)

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின் போது, இந்தியா முற்றிலும் உள்நாட்டு தொழில்நுட்பங்கள் மூலம், பாகிஸ்தானின் பல்வேறு இடங்களில் உள்ள, 9-10 இலக்குகளை, இருபத்தி எட்டே நிமிடங்களில் தாக்கி வெற்றி பெற்றதாக, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் கூறியுள்ளார். இன்று, சென்னை- ஐஐடி உயர்க் கல்வி நிறுவனத்தின் 62ஆவது பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், பிரம்மோஸ் ஏவுகணை, **ஒருங்கிணைந்த வான் கட்டுப்பாட்டு வசதி** போன்ற, பல்வேறு உள்நாட்டு தொழில்நுட்பங்களை, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, ராணுவம் பயன் படுத்தியதாகக் கூறினார். இதேபோன்ற புதிய தொழில்நுட்பங்கள், மற்றும், புதுமைப் படைப்புகளை இந்திய இளைஞர்கள் அதிக அளவில் உருவாக்கி, 2047ஆம் ஆண்டிற்குள், முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்த வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். படித்த, திறமையுள்ள இளைஞர்கள் அதிகம் உள்ள நாடான இந்தியாவில், இளைஞர்கள்தான், வளர்ச்சியில் அதிக பங்களிக்க முடியும் என்றும் அவர் கூறினார். மக்கள் தொகையை போலவே, இந்தியாவின் புவி -அரசியல் நிலையும் அலாதியானதே என்பதால், வளர்ச்சி மூலம் சர்வதேச தொடர்புகளை மேம்படுத்திக் கொள்வதுடன், இந்தியாவின் ஆன்மீக-கலாச்சார வலுவை பேணிக் காக்கவும், ஏதுவாகும் என்று திரு. அஜித் தோவல் மேலும் குறிப்பிட்டார்.

---------------------------

*ஷிவ்ராஜ்-பருத்தி* (12)

பருத்தி சாகுபடியில், பயிர் நோய்கள் முதல், பருத்தித் தொழில் துறையினர் தொடர்பான பிரச்சனைகள் வரை, எல்லாப் பிரச்சனைகளையும் தீர்க்க, அரசு வழி காணும் என்று, மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுகான் கூறியுள்ளார். இன்று, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கோவை மையத்தை பார்வையிட்ட பின்னர் அவர், செய்தியாளர்களிடம் பேசுகையில்,

அவர் இவ்வாறு கூறினார். பருத்திப் பயிரை தாக்கும் பூச்சிகளை உடனுக்குடன் அழிக்க, ஆராய்ச்சி மூலம் தீர்வு கண்டுபிடிக்கப்படும் என்றும், பருத்தித் தொழில் துறையினர் தொடர்பான பிரச்சனைகள் குறித்து, அதிகாரிகள் மூலம் விவசாயிகளிடம் பேசப்படும் என்றும், அவர் தெரிவித்தார். வேளாண்மையின் ஒவ்வொரு அம்சத்தின் மீதும் அரசு முக்கிய கவனம் செலுத்துவதாக மத்திய வேளாண் அமைச்சர் மேலும் கூறினார்.

--------------------------

*குமாரசாமி* 1 (4)

பிரதமரின் **இ-ட்ரைவ்** திட்டத்தின் கீழ், **பேட்டரியில் இயங்கும் லாரிகளுக்கு ஊக்கத் தொகை** வழங்கும் திட்டத்தை, மத்திய கனரக தொழில் துறை அமைச்சர் திரு. **ஹெச்.டி குமாரசாமி**, புதுடெல்லியில் இன்று தொடக்கி வைத்தார். இதுகுறித்து கூடுதல் விவரங்கள்….

**(வாய்ஸ்)**

*குமாரசாமி 2* (14)

**(வாய்ஸ்)**

நாட்டில், சுமார் 5 ஆயிரத்து 600 மின்சார லாரிகளை தயாரித்துப் பயன்பாட்டில் கொண்டு வருவதன் மூலம், உள்ளூர் உற்பத்தியை அதிகரிப்பதுடன், சரக்குப் போக்குவரத்து செலவுகள், மற்றும், **கார்பன் வெளியீட்டை** குறைக்கும் நோக்கத்துடன், **மின்சார லாரிகளுக்கான ஊக்கத் தொகைத்** திட்டம் தொடக்கப் பட்டுள்ளது. பேட்டரி மூலம் இயங்கும் **N-2 மற்றும் N-3 வகை லாரி**களுக்கு, அவற்றின் **மொத்த எடை**க்கு ஏற்ப, 9.6 லட்சம் ரூபாய் வரை, ஊக்கத் தொகை வழங்கப்படும் என்றும், ஊக்கத் தொகை பெற, **பழைய லாரிகளை கழித்தல்**, கட்டாயமாக இருக்கும் என்றும், மத்திய அமைச்சர் திரு. குமாரசாமி, திட்டத்தின் தொடக்க விழாவில் பேசுகையில் கூறினார். பேட்டரியில் இயங்கும் லாரிகளுக்கு, உற்பத்தியாளர்கள் மூலம் விரிவான உத்தரவாதம் அளிக்கப்படும் என்றும், லாரிகளில் பயன்படுத்துவதற்கான பேட்டரிகளுக்கு, 5 ஆண்டுகள், அல்லது 5 ஆயிரம் கிலோ மீட்டர்கள் வரை, உத்தரவாதம் கிடைக்கும் என்றும், அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

--------------------------

*இரண்டாயிரம் (16)*

**2 ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள்** புழக்கத்தில் இல்லை என்றாலும், **சட்டப்பூர்வச் செலாவணி**யாகவே நீடிப்பதாக, ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. **சஞ்சய் மல்ஹோத்ரா** கூறியுள்ளார். இந்திய பொருளாதாரத்தின் வளர்ச்சி குறித்து, **நிதித் துறைக்கான நாடாளுமன்ற நிலைக் குழு**விடம் விளக்கம் அளிக்கையில், அவர் இவ்வாறு கூறினார். நிலைக் குழு உறுப்பினர்கள் பலரும், 2 ஆயிரம் ரூபாய் **நோட்டுக்களின் நிலை** குறித்து, இக்கூட்டத்தின் போது கேள்வி எழுப்பினர். 500 ரூபாய் கள்ள நோட்டுக்கள் புழக்கத்தில் இருப்பதாக, மற்றொரு உறுப்பினர் கவலை வெளியிட்டார். ஆயினும், மொத்தம் 6 ஆயிரம் கோடி எண்ணிக்கையில், **ரூபாய் நோட்டுக்கள்** புழக்கத்தில் உள்ள நிலையில், கள்ள நோட்டுக்களின் விகிதம் மிக குறைவுதான் என்று, அவர் கூறினார். பிரச்சனை இருப்பதை **ரிசர்வ் வங்கி ஆளுநர்** ஒப்புக் கொண்டு, **500 ரூபாய் முகமதிப்புள்ள** கள்ள நோட்டுக்களின் எண்ணிக்கை, 37 சதவிகிதம் அதிகரித்து இருப்பதாகக் கூறினார். கள்ள நோட்டுப் பிரச்சனையை சமாளிக்க, அரசும், ரிசர்வ் வங்கியும், உறுதிப்பாடு கொண்டுள்ளதாகவும், இதுதொடர்பாக, தொடர்ச்சியான முறையில், பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

---------------------------

*புதுச்சேரி பழங்குடி 1 (18)*

புதுச்சேரியில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் செயல்பாடுகள் குறித்து, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் இன்று ராஜ்நிவாசில், சீராய்வுக் கூட்டம் நடத்தினார். தேசிய தாழ்த்தப் பட்டோர் ஆணையத்தின் தேசியச் செயலர் திரு. குடே ஸ்ரீநிவாஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்ட இக்கூட்டத்தில், துறைச் செயலர் டாக்டர் முத்தம்மா, துறையின் செயல்பாடுகள் குறித்து விரிவாக எடுத்துக் கூறினார். இவ்வாண்டு, சிறப்புக் கூறுகள் திட்ட நிதியை, விரைவாக, 100 சதவிகிதம் செலவிட வேண்டும் என, துணை நிலை ஆளுநர் இக்கூட்டத்தின் போது, அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். துறை மூலமாக கையகம் செய்யப்பட்ட நிலங்களில், மக்களுக்கு விரைவாக பட்டா வழங்குதல், வன்கொடுமை தடுப்பு சட்ட வழக்குகளை விரைந்து விசாரித்து முடித்தல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு, நகரப் பகுதியில் கூடுதல் விடுதிகளை அமைத்தல் உள்ளிட்ட அம்சங்களையும் அவர் வலியுறுத்தினார். தலைமைச் செயலர் டாக்டர் சரத் சவுகான், துணை நிலை ஆளுநரின் செயலர் டாக்டர் மணிகண்டன், தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையத்தின் மண்டல இயக்குநர்

திரு. ரவிவர்மன் உள்ளிட்டோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் வெளியான தகவல்கள் குறித்து ஒரு செய்தித் தொகுப்பு.....

**(வாய்ஸ்)**

*புதுச்சேரி பழங்குடி 2 (10)*

**(வாய்ஸ்)**

2011ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, புதுச்சேரி மாநிலத்தின் மக்கள் தொகையில், 15.7 சதவிகிதம், **அட்டவணை இனத்தினர்** உள்ளனர். அரசு பட்ஜெட்டில், திட்டச் **செலவினங்**களுக்கான 2 ஆயிரத்து 176 கோடி ரூபாயில், 24 சதவிகிதம், **அதாவது**, 525 கோடி ரூபாய், **திட்டக் கூறுகள் நிதி**யாக ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இது, **நிதி ஆயோக்** நிர்ணயித்த, 16 சதவிகிதத்தை விட கூடுதல் நிதியாகும். புதுச்சேரி அரசின் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, **இப்பிரிவு மக்களுக்கென**, 25 நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. கடந்த நிதியாண்டுகளில், **சிறப்புக் கூறுகள் நிதி**, 91 சதவிகிதம் செலவிடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

--------------------------

*ரங்கசாமி-ஆசிரியர் (7)*

புதுச்சேரி அரசின் பள்ளிக் கல்வித் துறையில், 7 ஆரம்பப் பள்ளி ஆசிரியர் பணியிடங்களுக்கு, தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கு, இன்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி, நியமன ஆணைகளை வழங்கினார். சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், கல்வி அமைச்சர் திரு. நமச்சிவாயம், கல்வித் துறைச் செயலர் திரு. கிருஷ்ண மோகன், மற்றும், இதர அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

--------------------------

*பெக் (11)*

**புதுச்சேரி தொழில்நுட்ப பல்கலைக் கழகத்தில், எம்.டெக், எம்பிஏ, எம்சிஏ** உள்ளிட்ட முதுகலைப் படிப்புகளில், மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பிக்கக் கடைசி நாள், ஜூலை 21ஆம் தேதியாக நீட்டிக்கப் பட்டுள்ளது. இளங்கலை **இறுதிப் பருவ மதிப்பெண் பட்டியல்** கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதை சுட்டிக் காட்டி, மாணவர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று, கால அவகாசம் இவ்வாறு நீட்டிக்கப் படுவதாக, **முதுகலை மாணவர் சேர்க்கைக் குழு**வின் தலைவர், செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார். மாணவர்கள், ஆன்-லைன்

மூலம் விண்ணப்பித்த பின்னர், விண்ணப்பத்தின் அச்சிட்ட நகலை, **சான்றிதழ் நகல்**களோடு சேர்த்து, ஜூலை 24ஆம் தேதிக்குள், நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ, **சேர்க்கைக் குழு**விடம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், அறிவுறுத்தப் பட்டுள்ளது.

--------------------------

*குவாண்டம் (12)*

மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம், குவாண்டம் சைபர் தயார் நிலைக்கு மாறுதல் என்னும் தலைப்பில், வெள்ளை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பத் துறையில் தற்போது ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், குவாண்டம் சைபர் துறைக்கு, பாதுகாப்பாக மாறுவது எப்படி என்பது குறித்து, விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் இந்த அறிக்கையில் இடம் பெற்றுள்ளன. டிஜிட்டல் தகவல் தொடர்பு கட்டமைப்பை, அடுத்த கட்டமாக, செயற்கை நுண்ணறிவு, மற்றும், குவாண்டம் தொழில்நுட்பங்களுக்கு மாற்றுவதில், சைபர் பாதுகாப்பு மிக முக்கியமானது என்றும், இதில் உள்ள பிரச்சனைகளை முன்கூட்டியே கண்டறிந்து, மாற்றத்திற்கு ஆயத்தமாதல் அவசியம் என்றும், துறைச் செயலர் திரு. எஸ். கிருஷ்ணன், நிகழ்ச்சியில் பேசுகையில் கூறினார்.

--------------------------

*வானிலை* (13)

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்றும், நாளையும், தமிழகத்தில் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், லேசானது முதல், மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 17ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும், 15, 16, 17 ஆகிய தேதிகளில், நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப் பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. நாளை மறுநாள் வரை, ஒருசில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை, இயல்பை விட 2 முதல், 4 டிகிரி செல்சியஸ் அதிகமாக பதிவாகலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, நாமக்கல் மாவட்ட சேந்தமங்கலம், ஈரோடு மாவட்டம பவானி உள்ளிட்ட இடங்களில், 3 செ.மீ மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரி திருக்கனூரில், 1 செ. மீ மழை பெய்துள்ளது.

--------------------------

Fast-tag (10)

Fast-tag அட்டைகளை, சிலர் தங்களின் வாகனங்கள் மீது ஒட்டாமல், கையிலேயே சுங்கச் சாவடிக்கு எடுத்து வருவதால், சுங்கச் சாவடி அலுவல்கள் பாதிக்கப் படுவதை கருத்தில் கொண்டு, இத்தகைய அட்டைகள் பற்றிய விவரங்களை, சுங்கச் சாவடி ஊழியர்கள் உடனுக்குடன் அரசுக்கு தெரிவிப்பதற்கான நடைமுறைகளை, தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் வலுப்படுத்தி உள்ளது. இதற்கென பிரத்யேக மின்னஞ்சல் முகவரி உருவாக்கப் பட்டுள்ளதாகவும், விவரங்கள் கிடைத்தவுடன், சம்பந்தப்பட்ட Fast-tag அட்டைகள், கருப்புப் பட்டியலில் சேர்க்கப்படும் என்றும், மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

--------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பல்வேறு அரசுத் துறைகளில் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட, 51 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை, நியமன ஆணைகளை வழங்குகிறார்.

இளைஞர்கள் அதிகம் உள்ள நாடான இந்தியாவில், இளைஞர்கள்தான், வளர்ச்சியில் அதிக பங்களிக்க முடியும் என்று, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் கூறியுள்ளார்.

**பேட்டரியில் இயங்கும் லாரிகளுக்கு ஊக்கத் தொகை** வழங்கும் திட்டத்தை, மத்திய கனரக தொழில் துறை அமைச்சர் திரு. **ஹெச்.டி குமாரசாமி**, புதுடெல்லியில் இன்று தொடக்கி வைத்தார்.

புதுச்சேரியில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் செயல்பாடுகள் குறித்து, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் இன்று சீராய்வுக் கூட்டம் நடத்தினார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**